DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 58/2023**

**prosecution witness: Pw 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராசாத்தி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**18.07.2023**

முதல் விசாரணை:-

1. நான் பாம்பன் தரவைத்தோப்பில் வசித்து வருகிறேன். பூ வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ தெரியும். கடந்த 14.06.2022-ம் தேதி மாலை 6 மணியளவில் அ.சா.1 னும், எதிரியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். நானும், முனீஸ்வரியும் சென்று அவர்களை விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1. போலீசார் விசாரணையில் கடந்த 14.06.2022-ம் தேதி மாலை 06.30 மணியளவில் ஆஜர் எதிரி அ.சா.1 வீட்டிற்குள் சென்று அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி, வீட்டிற்கு வெளியில் அவரை இழுத்து காலால் மிதித்தார் என்றால் சரியல்ல. அவரை தடுக்க வந்த அ.சா.2 ஐ எதிரி அருகில் கிடந்த கம்பை எடுத்துஅடித்தார் என்றால் சரியல்ல. அதில் அ.சா.2 க்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. பின்பு எதிரி அ.சா.1 னின் கழுத்தில் இருந்த தாலியை கையால் அறுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

பின்பு எதிரி அ.சா.1 ஐ ஒழுங்காக ஊரைவிட்டு ஓடிவிடு இல்லை என்றால் உன்னையும், உன் கணவரையும் தீ வைத்து எறித்துவிடுவேன் என்று மிரட்டியதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.